திரு. இராம. அரங்கண்ணல் : மாலை நேரக் கல்லூரி வகுப்புகள் அவசியமானவை என்று கோதாரிக் கமிட்டியாயினர் முடிவு தெரிவித்துள்ளனர். இப்பொழுது கல்கத்தா, பம்பாய் முதலிய நகரங்களில் மாலை நேரக் கல்லூரி வகுப்புகள் நடக்கின்றன. அதைப் போல் சென்னை மாநகரில் பரீட்சார்த்தமாக மாலை நேரக் கல்லூரி வகுப்புகள் திறப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதுபற்றி சென்னை பல்கலைக் கழகத்தோடு கலந்து ஆலோசிக்கப்பட்டது. அவ்வாறு மாலைநேர வகுப்புகள் மூலம் நல்ல முறையில் கல்வி போதிப்பது உகந்ததாக இருக்காது என்று கருதப்பட்டது. அதனால் மேலும் பரிசீலிக்கப்படவில்லை.

Elliot Beach Area

* 248 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether the Government are aware of the fact that a lot of rubbish and garbage of the Madras City are carried in trucks and heaped regularly in the Elliot Beach area, Adyar, polluting the healthy atmosphere thereat?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : எலியட் பீச் பகுதியில் சில சமயங்களில் தவிர மற்றப்படி வழக்கமாகக் குப்பை கொட்டுவதில்லையென்றும், இப்பொழுது அங்கு குப்பை கொட்டுவதை நிறுத்திவிட்டு, வேறு இடத்தில் கொட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள தென்றும் சென்னை மாநகராட்சிக் கமிஷனர் தெரிவித்துள்ளார்.

திரு. வை. சங்கரன் : மொபஸில் முனிசிபாலிடிகளில் இந்தக் குப்பைகளை கம்போஸ்ட் உரம் தயாரிப்பதற்கு உபயோகிப்பது போல கார்ப்பரேஷனிலும் செய்வதற்கு சர்க்கார் யோசனை கூறுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : எலியட் பீச்சுக்கு அருகில் பள்ளங்கள் இருந்ததால் அதை நிரப்புவதற்காக இந்தக் குப்பைகள் அங்கே போடப்பட்டது. இப்பொழுது எதிர்ப்பு தெரிவித்த பிறகு, நிறுத்தியாகிவிட்டது.

திரு. ஆர். ரங்கசாமி : இந்த குப்பை டெப்போக்கள் வெகு காலத்திற்கு முன்பு ஏற்பட்டவை. இப்பொழுது அபிவிருத்தி அடைந்து வரும் நகரங்களிலே, நகர எல்லைக்கு வெளியே இந்த டெப்போக்களை அகற்றுவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : குப்பையிலிருந்து கம்போஸ்ட் உரம் தயாரிப்பதற்கு வேறு இடம் பார்த்திருக்கிறோம். எலியட் பீச்சில் குப்பையைக் கொட்டுதல் சம்பந்தமாகத்தான் இந்தக் கேள்வி எழுகிறது.

கல்லூரியில் " ஷிப்டு " முறை

* 249 கேள்வி.—திரு. அ. பெ. தர்மலிங்கம் : (திரு. வெ. கிருஷ்ண மூர்த்தி சார்பாக) கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1963-64 கல்வியாண்டில் கல்லூரி புதுமுக வகுப்பில் தேவையான இடங்களில் ஷிப்டு முறையினை வைப்பதற்கு உத்தேசமுண்டா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : The University of Madras is the competent authority to permit the adoption of shift system in colleges. Proposals for starting evening classes for girls for Pre-University Course in the Government College, Kumbakonam, are under consideration of Government.

15th March 1963]

திரு. கே. ஏ. மதிழயகன் : ஸார், இந்த ஒரு பாலிசியை நம்முடைய சர்க்கார் யுனிவர்சிட்டிக்கு சிபாரிசு செய்யுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சர்க்கார் இதைப்பற்றி முடிவு எடுத்து யுனிவர்சிட்டிக்கு எழுதியது. அது ஒப்புக்கொள்ளவில்லை. இவைகளை யெல்லாம் யுனிவர்சிட்டியைக் கலந்து கொண்டுதான் ஒரு முடிவு எடுக்க வேண்டும். அவர்கள் முடியாது என்று சொல்லி விட்டபடியாலும் அவர் கள் ஒப்புக்கொள்ளவில்லை என்ற காரணத்தாலும் இந்த அரசாங்கம் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. யுனிவர்சிட்டியின் முடிவை இந்த அரசாங்கம் ஒப்புக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது.

District Educational Officers (District Board High Schools)

* 250 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether it is a fact that the posts of District Educational Officers have been sanctioned to be in charge of the administration of the High Schools which were under the management of the erstwhile District Boards ; and

(*b*) if so, the date from which it will be given effect to?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) Proposals for filling up the posts are under consideration of the Government. The Special District Educational Officers are expected to be posted shortly.

திரு. மு. பொ. வடிவேல் : ஸார், மாவட்ட கழகப் பள்ளிகளில் வேலை பார்க்கக்கூடிய ஆசிரியர்களுக்கு ஒவ்வொரு மாதக் கடைசியிலும் தான் சம்பளம் கொடுப்பதாக புகார்கள் அரசாங்கத்திற்கு வந்தனவா ? அதைப் பற்றி அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்குமா ? மேலும் பஞ்சாயத்து யூனியனில் வேலை பார்க்கிறவர்களுக்குப் பண்டிகை முன் பணம் கொடுப்பது போன்று இவர்களுக்கும் கொடுக்கப்படுவதில்லை என்று சொல்லப்படுகிறது. இதையும் அரசாங்கம் கவனிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றி தகவல் இப்பொழுது என்னிடம் ஒன்றும் இல்லை. தனிக் கேள்வி வேண்டும்.

Town Panchayat (Omalur)

* 251 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any complaint signed by eight members of the Omalur Town Panchayat alleging irregularities and misuse of funds in that Panchayat has been received by the Government ;

(*b*) when was the complaint received ; and

(*c*) the action taken in the matter?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) In April 1962.

(*c*) The Collector of Salem who is the Inspector of Panchayats for Salem district is taking necessary action on the complaints referred to in the petition. The Government are watching the action taken in the matter.